2021 செப்டம்பர் 13]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நீங்கள் கொடுத்திருக்கிறீர்கள். அதுவும் பதிவாகிவிட்டது.*

முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: *நானும் சிறப்புக் கவன ஈர்ப்பு அறிவிப்பு அளித்திருந்தேன். 'கஞ்சா வியாபாரிகளை இரும்புக் கரம் கொண்டு ஒடுக்குவோம்' என்று அறிவித்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) வாணியம்பாடி காவல் ஆய்வாளர் பணி இடைநீக்கம் செய்யப்பட்டிருக்கிறார். கஞ்சா வியாபாரியைப் பற்றி தகவல் கொடுத்தார் என்ற ஒற்றைக் காரணத்திற்காக அவர் படுகொலை செய்யப்பட்டிருக்கிறார்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *போதும்.*

முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: *அதேபோன்று, பாதிக்கப்பட்ட அந்தக் குடும்பத்தில் உள்ள அவருடைய மனைவிக்கு வேலைவாய்ப்பும், இழப்பீடும் தருவதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.*

(ஊ) கட்சி நிர்வாகி இல்லத் திருமணம், கொடிக்கம்பம் நடும்போது இறந்த சிறுவன் குடும்பத்திற்கு நிவாரணம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நிறைவாக, மாண்புமிகு உறுப்பினர் திருமதி வானதி சீனிவாசன் அவர்கள். ஒரு வரியில் சொல்லுங்கள்.*

திருமதி வானதி சீனிவாசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 15 நாட்களுக்கு முன்பாக அவையிலிருக்கக்கூடிய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கட்சியினுடைய நிருவாகியின் இல்லத் திருமணத்திற்குச் சென்றபோது 13 வயது சிறுவன் கொடிக் கம்பம் நடும்போது இறந்திருக்கிறார். அதற்காக அரசாங்கத்தின் சார்பாக ஏதாவது நிவாரணம் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.*

(எ) கல்விக் கடன் இரத்து, அரசு நடவடிக்கை எடுத்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: Right. *பதிவு செய்துவிட்டீர்கள், நன்றி. பதிவு செய்துவிட்டேன். உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர், பதிவு செய்துவிட்டேன். உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ், ஒரு வரியில் சொல்லுங்கள்.*

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒன்றிய அரசு கல்விக் கடன்*—corporate company-*களை வைத்து வசூலித்து வருவதால் பல்வேறு பிரச்சினைகள் வருகின்றன. ஆகவே, கல்விக் கடனை இரத்து செய்ய திராவிட முன்னேற்றக் கழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.*

(ஈ) கிருஷ்ணகிரி மாவட்டம், தளி மற்றும் வேப்பனஹள்ளி தொகுதிகள், யானை தாக்கி இறந்தவர்களுக்கு நிவாரணம் மற்றும் ஆலங்குளம் தொகுதி, காட்டுப் பன்றிகளால் பயிர்கள் பாதிப்பு—*தொடர்ச்சி*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பதிவு செய்துவிட்டீர்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. முனுசாமி, ஒரு வரியில் சொல்லுங்கள்.*

திரு. கே.பி. முனுசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணகிரி மாவட்டம் இரண்டு மாநிலங்களின் எல்லைப் பகுதியாக இருக்கிற காரணத்தினால். . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லிவிட்டார்கள். வேறு விஷயம் இல்லை. முடிந்துவிட்டது.*

திரு. கே.பி. முனுசாமி: *அதே* subject *தான்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அதற்கான பதிலையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லிவிட்டார்கள். வேறு விஷயம் இருந்தால், பிறகு பேசிக்கொள்ளலாம்.* (குறுக்கீடு) *அதற்கெல்லாம் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லிவிட்டார்கள்.*

3. அறிக்கைகள் அளித்தல்

(அ) மதிப்பீட்டுக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் முனைவர்* T.R.B. *ராஜா, மதிப்பீட்டுக் குழுவின் தலைவர் அவர்கள்.* (குறுக்கீடு) *நீங்கள் கேட்டதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லிவிட்டார்.*

முனைவர் T.R.B. ராஜா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலகம் போற்றும் எங்கள் முதலமைச்சர் அவர்களை வணங்கி, 2021–2022 ஆம் ஆண்டிற்கான மதிப்பீட்டுக் குழுவின் முதலாவது மற்றும் இரண்டாவது ஆகிய இரண்டு அறிக்கைகளைக் குழுவின் சார்பாக இப்பேரவைக்கு அளிக்கிறேன்.*